Register No. [ ]

**TA3A**

**6315–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

CONSTITUTIONAL LAW — II

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு, ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Analyse the administrative relationship between Central and State Governments.

   மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே ஆன நிர்வாக உறவுமுறைகள் குறித்து பகுப்பாய்வு செய்க.

2. Under what circumstances the National Emergency can be proclaimed by the President of India? Explain the consequences of such Proclamation.

   எத்தகைய சூழ்நிலைகளில், இந்திய குடியரசுத் தலைவர் தேசீய நெருக்கடி நிலையை பிரகடனம் செய்ய முடியும். அந்தப் பிரகடனத்தின் பின்விளைவுகள் குறித்து விளக்குக.

3. Explain the qualifications of Vice-President of India. How he is elected? Explain his functions and importance under Constitution of India.

   இந்திய துணை-குடியரசுத் தலைவரின் தகுதிகள் குறித்து விளக்குக. எவ்வாறு அவர் தேர்வு செய்யப்படுகிறார்? அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அவரது பணிகள் மற்றும் முக்கியத்துவம் குறித்து விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the procedure for impeachment of the President.

   குடியரசுத் தலைவரை பதவியிறக்கம்/நீக்கம் செய்வதற்கான நடைமுறையை கூறுக.

5. Narrate the functions of Union Public Service Commission.

மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் பணிகளை விவரிக்கவும்.

6. Discuss the Doctrine of Immunity of Instrumentality.

அரசின் துணை அதிகார அமைப்புகளின் சட்ட விலக்களிப்பு கோட்பாட்டினை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) How Speaker of Lok Sabha is elected/removed?

எவ்வாறு மக்களவை சபாநாயகர் தேர்வு செய்யப்படுகிறார் மற்றும் நீக்கப்படுகிறார்.

(b) Full Faith and Credit Clause

முழு நம்பிக்கை மற்றும் நாணய வகையம்

(c) Writ of Habeas Corpus

ஆட்கொணர்வு நீதிப்பேராணை

(d) Delimitation Commission

எல்லை நிர்ணய ஆணையம்

(e) Composition of Lok Sabha

மக்களவையின் அமைப்பு

(f) The Financial Bill

நிதி மசோதா

(g) Exceptions to Inquiry and opportunity of being heard (dismissal of civil servant).

விசாரணை மற்றும் விசாரிக்க வாய்ப்பளித்தலுக்கான விதிவிலக்குகள். (அரசு ஊழியரை பதிவியிலிருந்து நீக்கும்பொழுது).

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An ordinance was challenged on the ground that, it related to tax laws. Examine, whether the ordinance is valid.

வரி சம்பந்தப்பட்ட சட்டங்கள் கொண்ட ஒரு அவசரச் சட்டத்தின் செல்லும் தன்மை குறித்து வழக்கிடப்பட்டது. அந்த அவசரச் சட்டம் செல்லுமா என்று ஆராய்க.

9. A notification was issued under a State Act declaring timber as an "essential article". A total ban of movement of Timber outside the state was made. Decide whether this violates Articles 301 and 304.

ஒரு மாநில சட்டம், 'மரப்பலகை' ஓர் அத்தியாவசிய பொருள் என்று அறிவித்து அறிவிக்கை வெளியிட்டது. அந்த மாநிலத்திற்கு வெளியே பலகை கொண்டு செல்ல முழுமையான தடை விதித்தது. இது ஷரத்து 301 மற்றும் 304 பிரிவுகளை மீறுகிறதா என்று தீர்மானிக்கவும்.

10. A bus conductor was removed from service for not issuing tickets to passengers who were in the bus. Discuss, whether Removal from Service is proportionate to misconduct.

ஒரு பேருந்து நடத்துநர், பேருந்தில் இருந்த பயணிகளிடம் பயணச்சீட்டு வழங்காததால் பணியிலிருந்து நீக்கப்பட்டார். மேற்படி, தவறான நடத்தைக்கு, பணியிலிருந்து நீக்கிய தண்டனை உரிய விகிதம் கொண்டதா என்று விவாதிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA3B**

**6316–24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three – year Regular Course)

Second Year – Third Semester

LAND LAWS

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Bring out the various reasons for the abolition of Zamindari system in Tamil Nadu.

   தமிழ்நாட்டில் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டதற்கான பல்வேறு காரணங்களை வெளிக்கொணர்க.

2. Discuss the legal position of right to property under the Constitution of India.

   இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சொத்துரிமையின் சட்டநிலையை விவாதிக்கவும்.

3. What are the remedies available to the tenant, if a landlord refuses to receive the rent?

   வீட்டு உரிமையாளர் வாடகையை வாங்க மறுத்தால், வாடகைதாரருக்கு கிடைக்ககூடிய தீர்வழிகள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வெரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the salient features of the Tamilnadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956.

   1956-ம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாடகை செலுத்துதல்) சட்டத்தின் சிறப்பியல்புகளை விவரி.

5. Define Kudiyiruppu. Can the Kudiyiruppu or Super Structure conferred on an occupant be alienated?

குடியிருப்பை வரையறு. குடியிருப்புதாரருக்கு அளிக்கப்பட்ட குடியிருப்பு அல்லது மேற்கட்டடத்தினை உரிமை மாற்றம் செய்ய இயலுமா?

6. Explain the provisions relating to computation of compensation while acquiring a private land under the new LARR Act, 2013.

தனியார் நிலம் கையகப்படுத்திய பின் இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்கும் பொழுது கருத்தில் கொள்ளும் காரணிகள் சம்பந்தப்பட்ட வகையங்களை, புதிய LARR சட்டம், 2013-இன் கீழ் விளக்குக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Fair Rent
நியாய வாடகை

(b) Major Inams
பேரினாம்கள்

(c) Right to property
சொத்துரிமை

(d) Demolition and Reconstruction
இடித்தலும் மற்றும புதுப்பித்தலும்

(e) Kaiaeru varamdar
கையேறு வரம்தாரர்

(f) Rent Court and Rent Tribunal
குத்தகை நீதிமன்றம் மற்றும் குத்தகை தீர்ப்பாயம்

(g) Reference
சாட்டுகை

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The landlord files a petition for eviction against the tenants for the purpose of carrying on the profession of law. Can he recover the possession from the tenant–Decide.

வீட்டு உரிமையாளர் தனது வழக்கறிஞர் தொழிலை நடத்துவதற்காக வாடகைதாரரை வெளியேற்ற மனு ஒன்றினை தாக்கல் செய்கிறார். அவரால் வாடகைதாரரிடமிருந்து சுவாதீனத்தை திரும்பப் பெற முடியுமா? – தீர்வு செய்க.

9. A Christian family consists of husband, his wife and two unmarried daughters. The wife has 20 Standard Acres of Stridhana land. The husband has 25 Standard Acres of land. What is the ceiling on land? Is there any surplus land?

ஒரு கிறித்துவக் குடும்பத்தில் கணவன், மனைவி மற்றும் திருமணம் ஆகாத இரண்டு மகள்கள் உள்ளனர். மனைவிக்கு சீதனச் சொத்தாக 20 தரநிலை ஏக்கர் நிலம் உள்ளது. கணவருக்கு 25 தரநிலை ஏக்கர் நிலம் உள்ளது. நிலத்தின் மீதுள்ள உச்சவரம்பு என்ன? எஞ்சிய நிலம் ஏதேனும் உள்ளதா?

10. The government proposed to acquire land for the purpose of building a traveller's bungalow. Is this a public purpose? Can the land be acquired under the LARR Act, 2013–Decide.

விருந்தினர் மாளிகை கட்டுவதற்காக நிலத்தை அரசு கையகப்படுத்த திட்டமிட்டது. அது பொது பயன் ஆகுமா? 2013-ம் ஆண்டு நில கையகப்படுத்துதல், புனர்வாழ்வளித்தல், மற்றும் மீள்குடியேற்றுதல் சட்டத்தின் கீழ் நிலத்தை கையகப்படுத்த முடியுமா?-தீர்க்க

---

Register No. | | | | | | | |

**TA3C**

**6270–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three year – Regular Course)

Second Year — Third Semester

INTERPRETATION OF STATUTES

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The question whether a statute is mandatory or directory depends upon the intent of the legislature and not upon the language in which the intent is clothed" – Explain.

   "ஒரு செய் சட்டம் வலியுறுத்தும் சட்டமா அல்லது பரிந்துரைக்கிற சட்டமா என்பது சட்டமியற்றுதலின் நோக்கத்தையல்லாது அந்நோக்கத்தை சூழ்ந்துள்ள மொழியினை சார்ந்தது அல்ல" – விளக்குக.

2. Discuss the various external aids that can be used in interpreting a statute.

   செய் சட்டத்திற்கு சட்டப்பொருள் விளக்கம் அளிக்க உதவும் பல்வேறு வெளிப்புற காரணிகளை விவாதிக்கவும்.

3. Write about the general rules of Construction mentioned in the General Clauses Act, 1897.

   பொது வகையங்கள் சட்டம், 1897-ல் குறிப்பிடப்படும் பொருள் விளக்கத்தின் பொது விதிகள் குறித்து எழுதுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the rules of Doctrine of Harmonius Construction.

   இசைந்த வழி பொருள் கொள்ளுதல் கோட்பாட்டின் விதிகளை விவாதிக்கவும்.

5. State the rules followed by the Courts while trying to interpret a taxing statute.

ஒரு வரிவிதிப்புச் சட்டத்தின் பொருள் விளக்கம் காணும் போது நீதிமன்றம் பின்பற்றும் விதிகளை எடுத்தியம்புக.

6. Explain the doctrine of ejusdem generis with references to cases.

வழக்குகளை மேற்கோள் காட்டி "இனங் கொண்டு பொருள் கொளல்" கோட்பாட்டினை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Incidental powers.
துணை அதிகாரங்கள்.

(b) Codified Statute.
தொகுப்புச் சட்டம்.

(c) De minimis non curat lex.
சட்டத்திற்கில்லை அற்பத்தில் அக்கறை.

(d) Supreme Legislation.
உச்ச சட்டம்.

(e) Heydon's Case.
ஹேடன் வழக்கு.

(f) Logical Interpretation.
தருக்க முறையான பொருள் விளக்கம்.

(g) Territorial nexus.
எல்லைத் தொடர்பு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "Vegetables" are given tax exemption under the Mahilana Sales Tax Act, by the Mahilana Government. Bharathi, a betel leaves seller, claims tax exemption. Decide

மகிலானா விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் மகிலானா அரசாங்கமானது "காய்கறிகளுக்கு" வரிவிலக்கு அளிக்கிறது. பாரதி என்ற வெற்றிலை வியாபாரி தனக்கும் வரி விலக்கு கோருகிறார். முடிவு செய்க.

9. The Passport of Suresh was cancelled by a Passport officer without assigning any reason for his action under Section 10(c) of the Passport Act. Suresh challenged the action as unconstitutional and violative of his fundamental rights. Decide.

பிரிவு 10(c) கடவுச்சீட்டு சட்டப்படி கடவுச்சீட்டு அதிகாரியால் எந்தக் காரணமும் கூறாமல் சுரேஷ் என்பவரது கடவுச்சீட்டு நீக்கம் செய்யப்படுகிறது. இச்செயல் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றும், அதன் கீழ் தனது அடிப்படை உரிமை பாதிக்கப்படுவதால் இது செல்லாது என்றும் சுரேஷ் வழக்காடுகிறார். தீர்மானிக்கவும்.

10. Under the Minimum Wages Act, State Government is empowered to fix minimum wages in an industry. However, the Act does not define what is minimum wage and makes no provision for taking into consideration the capacity of an employer to pay the minimum wage fixed by the State Government. A petition was moved before the Court seeking to strike down the Act as violative of Article 19(1)(g) of the Constitution, which guarantees the right to practise any profession or to carry on any occupation, trade or business to all citizens. Decide on the basis of principles of Interpretation of Statutes.

குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் கீழ் ஒரு தொழிலில் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. எவ்வாறாயினும், சட்டம் குறைந்தபட்ச ஊதியம் என்ன என்பதை வரையறை செய்யவில்லை மற்றும் மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தை வழங்குவதற்கான முதலாளியின் திறன் கருத்தில் கொள்ள எந்த ஏற்பாடும் செய்யவில்லை. அனைத்து குடிமக்களுக்கும் எந்த ஒரு தொழில் வேண்டுமானாலும் மேற்கொள்ள அல்லது தொழில், வர்த்தகம் அல்லது வியாபாரத்தை மேற்கொள்வதற்கான சுதந்திரத்தினை உறுதிப்படுத்தும் அரசமைப்பின் 19(1)(g) உறுப்பை மீறும் சட்டத்தை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. சட்டங்களின் விளக்க கொள்கைகளின் அடிப்படையில் முடிவு காண்க.

---

Register No. | | | | | | | | |

**TA3D**

**6271–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three – year Regular Course)

Second Year – Third Semester

COMPANY LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours    Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Describe the Doctrine of Indoor Management as an exemption to the Doctrine of Constructive Notice.

   உட்புற நடைமுறை கோட்பாட்டை, கொள்நிலை அறிக்கை கோட்பாட்டுக்கு விதிவிலக்காக விவரிக்கவும்.

2. Enumerate the procedure and requisites of a valid meeting.

   ஒரு செல்லத்தகுந்த நிறுவன கூட்டத்தின் நடைமுறைகள் மற்றும் முக்கிய கூறுகளை விவரி.

3. Explain the powers and functions of SEBI (Securities and Exchange Board of India).

   இந்திய பங்கு வர்த்தக மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Describe the binding force of Memorandum and Articles of Association on members and company.

   நிறுவனம் மற்றும் உறுப்பினர்கள் மீது அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின் கட்டுப்படுத்தும் தன்மையை விளக்குக.

5. "Share certificate binds the company by estoppel as to title and payment" – Analyse.

பங்குச் சான்றிதழ் என்பது பங்கு உரிமை மூலம் மற்றும் தொகை செலுத்தியதற்கான முரண்தடையாக நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் - ஆராய்க.

6. Define the format of Debenture and describe the kinds of debentures.

கடனீட்டு பத்திரத்தின் பொருண்மை வடிவத்தை விவரித்து அதன் வகைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Ashbury Railway Co. v. Riche.

ஆஷ்பரி ரயில்வே நிறுவனம் எதிர் ரிச்சி.

(b) Government Company.

அரசு நிறுவனம்.

(c) Insider Trading.

உள் வர்த்தகம்.

(d) Statement in lieu of Prospectus.

திட்ட அறிவிப்புக்கு ஈடான அறிக்கை.

(e) Oppression and Mismanagement.

அடக்குமுறையும், முறையற்ற மேலாண்மையும்.

(f) Call on Shares.

பங்குத் தொகை கோரிக்கை.

(g) Special Courts.

சிறப்பு நீதிமன்றங்கள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "A" offered to buy 100 shares in "B Co. Ltd.,". Though the allotment letter was duly addressed and posted, the letter was lost in transit and "A" did not receive the letter. On bankruptcy of company, the liquidator sued "A" for outstanding payment on shares. Is "A" liable? Analyse.

"B" நிறுவனத்தில் 100 பங்குகளை வாங்க "A" முன்வந்தார். பங்கு ஒதுக்கீடு கடிதம் முறையாக அஞ்சலில் சேர்பிக்கப்பட்ட பின்னரும் தொலைந்து போனதால், கடிதம் "A"வை சென்றடையவில்லை. நிறுவனம் நொடிப்பு நிலையடைந்த நிலையில், நிறுவன நொடிப்பு நிலை அதிகாரி பங்குகள் மீதான நிலுவை தொகைக்காக "A" மீது வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கு நிலைக்கத்தக்கதா? ஆராய்க.

9. 'A' and 'B' were the only members of a private company. Both die in an accident. The Registrar of companies wants to delete the company from the register. Can he do so?

'அ' மற்றும் 'ஆ' இருவரும் ஒரு தனியார் நிறுமத்தின் ஏக உறுப்பினர்கள். அவர்கள் இருவரும் ஒரு விபத்தில் இறந்து விடுகின்றனர். நிறுமப் பதிவாளர் அந்நிறுமத்தை நிறுமப் பதிவேட்டிலிருந்து நீக்க விரும்புகிறார். அவர் அவ்வாறு செய்ய இயலுமா?

10. Three Thousand copies of a document inviting subscription of shares headed "for private circulation only" were distributed to shareholders of Gas company and it was not publicly advertised. Does it can be termed as Prospectus? Explain.

"தனிப்பட்ட புழக்கத்திற்கு மட்டும்" என்று குறிப்பிடப்பட்ட பங்கு முதலீடு செய்ய கோரும் 3000 பிரதிகள், எரிவாயு நிறுவனத்தின் பங்குதாரர்களிடம் விநியோகிக்கப்பட்டது. மேலும், அது பொதுவாக விளம்பரப்படுத்தப்படவில்லை. அந்த ஆவணம் அது திட்ட அறிவிப்பாக கருதப்படுமா? விளக்குக.

———————

Register No. | | | | | | | | |

**TA3E**

**6272–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

BANKING LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Banker is a Privileged Debtor". Analyse with the relationship between Banker and Customer.

   "வங்கியர் என்பவர் சலுகைபெற்ற கடனாளி". வங்கியர் வாடிக்கையாளரிடையே உள்ள தொடர்பை கொண்டு ஆராய்க.

2. The Banker's obligation to maintain secrecy of customer is "Damocle sword hanging over the head of Banker". Explain with exceptions.

   வாடிக்கையாளரின் இரகசியம் காக்கும் வங்கியரின் கடமை தலை மேல் தொங்கும் கத்தி போன்றதாகும் – விதிவிலக்குகளுடன் விவரி.

3. Explain the criminal and civil liability pertaining to dishonour of cheque with recent amendments in Negotiable Instruments Act, 1881.

   1881–ஆம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச் சட்டத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்களை கொண்டு காசோலை மதிப்பளிக்க மறுக்கப்பட்டால் உருவாகும் உரிமையியல் மற்றும் குற்றவியல் கடப்பாடுகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Enumerate the rights and privileges of Holder-in due course.

   உரிய முறையில் மாற்றுமுறை ஆவணத்தைக் கொண்டிருப்பவரின் உரிமைகளையும் சலுகைகளையும் கூறுக.

5. Explain the permitted and prohibited Businesses by the Banker under the Banking Regulation Act, 1949.

வங்கிகள் ஒழுங்குமுறை சட்டம் (வங்கியியல் ஒழுங்குமுறை சட்டம்), 1949–யின் கீழ் வங்கியர் புரிய அனுமதிக்கப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட வணிகங்களை விளக்குக.

6. Differentiate Cash Reserve Ratio and Statutory Liquidity Ratio as per RBI regulations.

இந்திய ரிசர்வ் வங்கியின் நெறிமுறையின்படி பண இருப்பு விகிதம் மற்றும் சட்டப்பூர்வ பண புழக்க விகிதத்தை வேறுபடுத்துக.

PART C — ($5 \times 4 = 20$ marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Evolution of Banking.

வங்கியியலின் பரிணாமம் (வளர்ச்சி).

(b) Garnishee Order.

வைப்பீடு பற்றுகை ஆணை.

(c) General Crossing.

பொது குறுக்குக்கோடிடல்.

(d) Rule in Clayton's case.

கிளேட்டன் வழக்கின் விதி.

(e) Safety Deposit Lockers.

பாதுகாப்பு பெட்டக வசதி.

(f) Kinds of Bill of Exchange.

மாற்றுச் சீட்டின் வகைகள்.

(g) Customer as Minor.

இளவராக வாடிக்கையாளர்.

PART D — ($2 \times 6 = 12$ marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. On banker refusing to grant Loan to the customer, the customer left all his documents in the bank negligently. The banker claimed the right of General lien over the documents of customer for his previous loan amount. Is the right of General lien exercisable? Explain.

வங்கியர் வாடிக்கையாளருக்கு கடனளிக்க மறுத்ததால், வாடிக்கையாளர் தனது ஆவணங்களை கவனக்குறைவாக வங்கியில் விட்டுச் சென்றார். வாடிக்கையாளரின் பழைய கடன் தொகைக்காக வங்கியர் அவ்வாவணங்களின் மீது தனது பொதுப் பற்றுரிமையை கோரினார். வங்கியரின் பொதுப் பற்றுரிமை செயல்படுத்தத் தக்கதா? விளக்குக.

9. The Bill of Exchange dated 31st August, 2023 is made payable three months after the date. Calculate the maturity date of the instrument.

ஆகஸ்ட் 31, 2023 என்று தேதியிட்ட மாற்றுச்சீட்டு அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப்பின் செலுத்தப்படுவதாக ஏற்படுத்தப்பட்டது. அந்த ஆவணத்தின் முதிர்வு தேதியை கணக்கிடுக.

10. Alex, a foreigner on visit to India lost his traveller's cheque in Bangalore. He informed the "X" Bank's Branch in Bangalore which in turn informed all the Bank's Branches. But the traveller's cheque has been encashed by "Z" in Salem Branch of "X" Bank. Discuss the liability of "X" Bank.

அலெக்ஸ் என்ற அயல்நாட்டவர் இந்தியாவிற்கு வந்தபோது அவரது பயணியர் காசோலையை பெங்களூரில் தொலைத்தார். அவர் பெங்களூரிலுள்ள "X" வங்கி கிளையில் தகவல் தெரிவிக்க மற்ற வங்கி கிளைகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் "Z" என்பவரால் "X" வங்கியின் சேலம் கிளையில் காசோலை மதிப்பளிக்கப்பட்டு பணமாக்கப்பட்டது. "X" வங்கியின் கடப்பாட்டை விவாதிக்கவும்.

---